பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 10 உ திங்கட்கிழமை (24-6-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 201

# சமாதானப் பேச்சுக்கு அரசாங்கம் தயாராம்!

## எனினும் அச்சுறுத்தல் மூலம் அரசை அடிபணிய வைக்க முடியாது என்கிறார் பிரேமா

கொழும்பு, ஜூன் 24

வடக்கு—கிழக்கு நெருக்கடி இன்று தேசியப் பிரச்சினையாகி விட்டது. அதனைத் தீர்த்து வைப்பதற்குச் சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் தயாராகவே உள்ளது.

ஆனால் அச்சுறுத்தல் மூலமோ பயங்கரவாதத்தின் மூலமோ அரசாங்கத்தை அடிபணிய வைத்து விட முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

— இவ்வாறு கம்புறுப்பிட்டியில் நேற்று கிராம எழுச்சி (கம் உதாவ) வைபவத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் சிறீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை கொழும்பில் நடந்த கூட்டுப்படைத் தலைமை அலுவலக குண்டு வெடிப்புச் சேதங்களை நேரில் பார்ப்பதற்காக கம்புறுப்பிட்டியில் இருந்து இங்கு வந்த பின்னர், ஜனாதிபதி மீண்டும் கம்புறுப்பிட்டி சென்றிருந்தார்.

ஜனாதிபதி தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

வடக்கு-கிழக்கு நெருக்கடி நாட்டின் தேசியப் பிரச்சினையாக மாறிவிட்டது. அதனை வளரவிடாமல் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறையாக உள்ளது.

எனவே—

வடக்கு-கிழக்கு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு குறுகிய அரசியல் நோக்கத்தைக் கைவிட்டு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்குச் சகலரும் முன்வரவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் மொழிப் பிரச்சினை, பிரஜா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலியிலிருந்து ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 24

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 6 மணி முதல் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகமான ஷெல்கள் கட்டுவன் பகுதிகளிலேயே விழுந்து வெடித்தன. (இ-15)

## வீரமரணம்

யாழ்ப்பாணம் ஜூன் 24

கட்டுவனில் நடைபெற்ற நேரடி மோதலில் இரண்டாவது லெப்டினன்ட் ரவிராஜ் (சின்னராசா தவராசா- அளவெட்டி) என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்துள்ளார்.

## பத்திரிகைகள் வெளியிடும் ஊகம்:

## கொக்கட்டிச் சோலைக்கு கொழும்பில் பழிவாங்கல்?

கொழும்பு, ஜூன் 24

கொக்கட்டிச்சோலையில் தமிழர்களைப் படுகொலை செய்த இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு பழிவாங்கும் செயலாகவே, கொழும்பில் கடந்த வெள்ளியன்று இராணுவத் தலைமையகத்தின் மீது தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தினரா?

-இப்படிக் கொழும்புப் பத்திரிகைகள் கேள்வி எழுப்பியிருக்கின்றன.

இதற்கிடையில்—

வெள்ளியன்று இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 40 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஏஜென்சிச் செய்திகள் நேற்று ஊர்ஜிதம் செய்தன. (உ-எ)

## வடக்கு - கிழக்கிற்குப் பொறுப்பான

## ராணுவ மத்திய நிலையமும் வெடிகுண்டினால் சேதம்

கொழும்பு, ஜூன் 24

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொழும்பு இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் இயங்கி வந்த வடக்கு—கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான தலைமை நிலையமும் சேதமடைந்தது என்று அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வடக்கு-கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை பற்றிய விவரங்கள் இராணுவத் தலைமை அதிகாரிகளுக்குக் கிடைக்கவில்லை என்றும்—

அந்த நிலையத்தை வேறொரு பகுதியில் மாற்றி அமைத்து வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவ உயரதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் - பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## குண்டை வெடிக்க வைத்த நபரின் கணுக்கால் மீட்பு!

கொழும்பு, ஜூன் 24

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியவர் எனக் கருதப்படும் தற்கொலைப் படையைச் சேர்ந்தவரின் கணுக்கால் பகுதியை புலன் விசாரணைப் பிரிவினர் கண்டு எடுத்துள்ளார்களாம்.

பொலிஸ் பகுதியை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையினரே குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பு என்றும் புலன்விசாரணை அதிகாரிகள் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்புப்பகுதி தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்த, நீலன் என்பவர் 14 நாட்களுக்கு முன் அங்கிருந்து கொழும்பு சென்றிருந்தார் என்றும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனராம். (அ-5)

## வெளிநாட்டு நிறுவனங்கள் வங்கிகளுக்குப் பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து கொழும்பு நகரப் பகுதியிலும், சுற்றாடற் பகுதியிலும் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், வெளிநாட்டு ஏஜென்ஸி கம்பனிகள், வங்கிகள் ஆகியவற்றுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காவில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள உள்நாட்டு வெளிநாட்டு உற்பத்தி நிறுவனங்களுக்கும் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அலுவலகங்கள் நிறுவனங்களுக்குச் செல்லும் பாதைகளும் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன. (அ-3)

## ஜெயலலிதா தலைமையில் 17 பேர் அமைச்சரவையில்

சென்னை, ஜூன் 24

இன்று நண்பகல் 12. 30 மணிக்கு பதவி ஏற்கவிருக்கும் அ. தி. மு. க. அமைச்சரவையில் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவுடன் 17 பேர் இடம்பெற்றிருக்கின்றனர்.

புதிய அமைச்சரவையில் திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. கிருஷ்ணசாமி, எஸ். டி. சோமசுந்தரம், ஆர். எம். வீரப்பன், கே. ராஜாராம், கே. அரங்கநாயகம், எஸ். முத்துசாமி கே. ஏ. செங்கோட்டையன், ஜி. மதுசூதனன், எஸ். கண்ணப்பன், அழகு திருநாவுக்கரசு, கே. பி. கிருஷ்ணன், டி. எம். செல்லகணபதி, முகமது ஆஸிப், எம். ஆனந்தன், டி. ஜெயக்குமார், திருமதி இந்திரகுமாரி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (உ-எ)

## கொள்ளையர் குழு அகப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 24

நீண்டகாலம் பல கொள்ளைகளில் ஈடுபட்டு வந்ததாகக் கருதப்படும் — ஆயுதம் தாங்கிய — கொள்ளையர் குழு ஒன்றை விடுதலைப் புலிகள் கைது செய்திருப்பதாக அறிய வருகிறது.

யாழ்., வன்னிப் பகுதிகளில் பத்துக்கும் மேற்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும்இக்குழுவைச் சேர்ந்த சுமார் இருபது பேர் புலிகளினால் கைது செயயப்பட்டிருக்கிறார்கள்.

சமூக விரோதக் கும்பல்களிடமிருந்து இக்குழுவினர் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் தானியங்கித் துப்பாக்கி, கைத்துப்பாக்கி மற்றும் கைக், குண்டுகள் ஆகியவற்றையும்—

இக்குழுவினால் கொள்ளையிடப்பட்ட பணம், நகை என்பவற்றில் பெரும் பகுதியும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டிருப்பதாக புலிகள்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கொள்ளைக் குழுவின் தலைவன் என்று கருதப்படும் ஜெயராஜா நந்தகுமார் (வயது 28) என்ற நபரும் புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## முச்சந்தி முரளி



உவர்... உத்தமர் சுநதி மாத்திரம் பேரவை...!

## யாழ். உ. அ. பிரிவில் மட்டும் 4 ஆயிரம் வீடுகள் சேதம்

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் விமானப் படையினர் நடத்திய தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல் காரணமாக யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 4,029 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கடந்த வருடம் ஜூன் மாதம் 11-ஆம் திகதி தொடக்கம் இவ்வருடம் மே மாதம் 31-ஆம் திகதி வரை யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கையால் அரசாங்க, தனியார் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 28 கிராம சேவகர்கள் பிரிவுகளிலும் இந்த விவரங்கள் திரட்டப்பட்டன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படையால் கொலையுண்ட வயோதிப மாதுவின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு!

### சரவணைப் பகுதியில் சம்பவம்

புளியங்கூடல், ஜூன் 24

சரவணை முதலாம் வட்டாரத்தில் படையினரால் கொல்லப்பட்டு பின்பு சாக்கு ஒன்றினுள் கட்டப்பட்டு கிணற்றினுள் போடப்பட்டதாகக் கருதப்படும் பெண்மணி ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இப்பகுதியில் வீடு பார்க்கச் சென்ற சிலர் கிணறு ஒன்றில் துர்நாற்றம்வீசுவதைக் கண்டு அங்கு சென்று பார்த்தனர். கிணற்றினுள் சாக்கில்கட்டப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரமணாலங் குளத்திலிருந்து படையினர் பின்வாங்கினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

கடந்த பன்னிரண்டு நாட்களாக மன்னார் — வவுனியா வீதியில் — பிரமணாலங்குளம் பகுதியில் — இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஸ்ரீலங்காப் படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது [illegible]குளம், பாலம்பிட்டிக்குளம் முகாம்களுக்கு திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பறையனாளங்குளம், கூழாங்குளம், ஆண்டியா புளியங்குளம் ஆகியவை ஊடாக மன்னார் — மதவாச்சி பிரதான வீதிக்கு சென்று அங்கிருந்து படையினர் செட்டிகுளம் முகாம் திரும்பினர்.

படையினர் திரும்பிச் செல்லும் போது ஆண்டியா புளியங்குளம் பகுதியில் மிதிவெடிகளில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

வவுனியா மற்றும் பகுதிகளில் அமுல் செய்யப்பட்டு வரும் ஊரடங்கு எந்நேரத்திலும் நீக்கப்படக் கூடிய நிலை நேற்று இருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தள்ளு கதிரை (Wheel Chair) உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும் சம்பந்தன் டிஸ்பென்சரி, 574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (17229)

### ரைப்பிங் சேவை

தமிழ் [புதிய விசைப் பலகை] ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ், ஆங்கிலம், (ஸ்ரென்சில்) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [நகர மண்டபம் முன்பாக] [சி/0165]

### ரைப்றைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [கி/0170]

### மணமகன் தேவை

யாழ். இந்துப் பெற்றோர் அரசாங்க உத்தியோகம் வகிக்கும் செவ்வாய்க் குற்றமற்ற அழகிய 31 வயதுடைய பெண்ணுக்குத்தக்க மணமகனை எதிர்பார்க்கின்றனர். யாழ். நகரில் வீட்டுடன் சீதனம் வழங்கப்படும். மணமகன் கனடா செல்ல விரும்பின் செல்வதற்கு ஒழுங்குகளும் செய்யப்படும். முழு விவரங்களுடனும் தொடர்பு: இல. 322 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17301]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (4163)

### புதிய புத்தகம்

படித்துவிட்டீர்களா? ''The Sparks'' (A Collection of Ten Short Stories By- A, Santhan) விலை: ரூ. 20/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (4165)

## குப்பிளானில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 23 குப்பிளான் பகுதியில் சனி பிற்பகல் 3. 30 மணியளவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்ததாகத் தெரியவருகிறது. (உ-15)

## தமிழ்த் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24 யாழ். கல்வி மாவட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 118 பாடசாலைகள் இப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன. (த)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**சிறீரங்கநாதன் முருகதாஸ்**

ஜனனம்: 05 - 04 - 1962 மரணம்: 24 - 06 - 1986

கண்களில் வடிந்த கண்ணீர்
வற்றவில்லை ஐயா - வருடங்கள்
ஐந்தென்ன ஐயாயிரம் ஆனால் தானென்ன?

என்றென்றும் உன்னை மறவாத;
அப்பா, அம்மா, தங்கை,
உறவினர்கள்.

''ஆனந்த பவனம்''
கட்டுடை, மானிப்பாய். [4155]

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 24 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா நாளை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் ஏக உற்சவமும் நாளை நடைபெறவுள்ளது. (த-5)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 24 நாவடி- அம்பலவாண கந்தசுவாமி கோவில் (முருகமூர்த்தி ஆலய) புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது. (த-5)

## மருந்துக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24 யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையிலிருந்து இங்கு வந்து சேர வேண்டிய மருந்துகள் வராததாலேயே தட்டுப்பாடு உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது. (த-30)

## போர்க்காலக் கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஜூன் 24 முல்லைத்தீவு மாவட்டத்தில் புயல் வேகப் போர்க்காலக் கருத்தரங்குகள் இடம் பெற்று வருகின்றன.

இக் கருத்தரங்குகள் மாவட்ட மட்டத்தில் சகல சிற்றூரவைகள் தோறும் முல்லைத்தீவு மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளரினால் நடத்தப்பட்டு வருகின்றன. (த-126)

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை


**ENGLISH TEACHERS EXAM**

போட்டிப் பரீட்சைக்கான

**விசேட பயிற்சி வகுப்புகள்**

2ஆவது பிரிவு ஆரம்பம்: 29 - 06 - 1991
9-00 a. m.

★ பல ஆசிரியர்களின் இணைந்த சேவை
★ வாராந்தம் 12 மணித்தியாலங்கள்
★ இலவச பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 150-00 (முழுப் பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:- நேரில்

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
[0172]


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 - 12 - 1936

மறைவு: 24 - 06 - 1985

திதி: 17 - 06 - 1991

**அமரர் க, செல்லையா**

(அளவெட்டி, அ. மி. த. க. பாடசாலை அதிபர்)

அன்பு ஒளி அணைந்து
ஆறாண்டு சென்றதுவே
ஆறாது எம் நெஞ்சில்
ஐயா, உம் துயர் அலைகள்
அன்று எம் முன் இருந்து
அறிவுரைகள் பகர்ந்தீரே!
தங்கள் அடி தொடர
தருணம் வரும் வரைக்கும்
தவறாது பூசிப்பேன்
ஐயா உம் நிழல் உருவம்.

தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மகன், மகள்மார்.

திருவேரகம்,
ஆசிரியமணி செல்லையா வீதி,
தெற்கு அளவெட்டி. (17249)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வைரமுத்து இரத்தினம்**

(இளைப்பாறிய சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

தோற்றம்: 19 - 05 - 1919 மறைவு: 05 - 07 - 1990

திதி: 24 - 06 - 1991

நாம் வாழ வழிகாட்டி, அன்பால், பண்பால் எங்களை நல்வழி நடத்தி, கலங்கரை விளக்காய் ஒளிதந்து, வாழ வைத்த எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கல்வத்தை லேன்,
காங்கேசன்துறை.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இரத்தினம் வரதராஜா**

(சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

தோற்றம்: 19 - 09 - 1949 மறைவு: 27 - 06 - 1983

அன்பின் திருவுருவாய், அறிவின் பிறப்பிடமாய், பண்பின் ஒளிச்சுடராய், இனியவனாய், குடும்ப விளக்காய் எங்களுடன் வாழ்ந்து எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்ட அன்புச் செல்வமே! ஆண்டுகள் எட்டு மறைந்தாலும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

பிரிவால் துயருறும்;
அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உறவினர்கள்.
(17248)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08-10-1972

மறைவு: 24-06-1988

**றோகான் கஜாநந்தன் தம்பையாபிள்ளை**

காலன் வசப்பட்டே
மூன்றாண்டு மாகுதையா!
காலமெல்லாமுன்
நினைவே வாட்டுதையா!
றோகானே! எம் இருவே!
தேவனடி சென்று விட்டாய்;
ஆறாத எம் துயரை
ஆற்ற இங்கே யாருள்ளார்;

உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்;
குடும்பத்தினர்.

151, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (17315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதியவழி தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் குறித்து ஆராய்வதற்காக, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் புதிய ஆலோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து மாதாந்தம் கிடைத்த உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், எரிபொருள்கள் என்பனவற்றின் அளவுகளைக் குறிப்பிட்டு அவை போதாது என்று அரசுக்கு அறிக்கை அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பிட்ட தேவையில் இருந்து குறைவான அளவு பொருள்கள், மருந்து வகைகள் கிடைத்ததால் எத்தனை பேர் பட்டினியால் மாண்டார்கள், நோய்க்கு மருந்தில்லாமல் மரணித்தார்கள் மற்றும் பாதிப்புகள் எவை என்பனவற்றை உள்ளடக்கிய அறிக்கையையே அனுப்ப வேண்டும் என்பதே அந்தப் புதிய யோசனையாகும்.

கடந்த ஒரு வருட காலமாக, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டுமன்றி, வட மாகாணத்திற்கு மட்டுமன்றி, வடக்கு-கிழக்குப் பிரதேசம் முழுவதற்குமே உணவும், மருந்தும், எரிபொருளும் மிக மிகக் குறைந்த அளவில் அனுப்பப்பட்டு வருகின்றன. பற்றாக் குறையைச் சுட்டிக்காட்டி மாதாந்தம் அறிக்கை அனுப்பியும் எவ்வித பயனும் இல்லை. ஆனால் வெளி உலகத்தை ஏமாற்றுவதற்காக கப்பல் கப்பலாகப் பொருள்கள் அனுப்பப்படுவதாக அரசு பொய்ப் பிரசாரம் செய்கிறது.

ஆகையால் வழமையான பல்லவியையே மாதந்தோறும் பாடிக்கொண்டிருக்காமல், உண்மை நிலையை வெளிப்படுத்த, பாதிப்புகளை அம்பலப்படுத்துவது என்பது நல்ல யோசனையே. பற்றாக்குறை, தட்டுப்பாடு காரணமாக எத்தனை பேர் மடிந்தார்கள். எத்தனை பேர் நோய்வாய்ப்பட்டார்கள் மற்றும் அந்த மாதத்தில் உண்டான வழமைக்கு மாறான பாதிப்புகள் என்பனவற்றைப் புள்ளி விவரங்களோடு அட்டவணைப்படுத்தி அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கொழும்பில் நிலைகொண்டிருக்கும் சகல நாடுகளின் தூதுவர்களுக்கும் அந்த அறிக்கையின் பிரதிகளை அனுப்ப வேண்டும். கொழும்பில் இயங்கும் சகல செய்தி முகவர் நிலையங்களுக்கும், வெளிநாட்டுப் பத்திரிகைச் செய்தியாளர்களுக்கும் பிரதிகளை அனுப்ப வேண்டும். சர்வதேச மனித உரிமை இயக்கங்கள், ஐ. நா. சபை மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றுக்கும் மாதாந்தப் பாதிப்புச் சம்பந்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

அப்போது தான் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதை வெளி உலகத்துக்கு நிரூபிக்க முடியும். அதனால் ஏற்படும் பாதிப்புகளை வெளிக்கொணர்ந்து ருசுப்படுத்த முடியும்.

வெறும் பற்றாக்குறை அறிக்கையோடு திருப்தி அடைந்து விடாமல் பிரச்சினையை அரசியல் மயப்படுத்தவும் ஆரம்பிக்க வேண்டும். ஒரு வருடம் கழிந்து விட்டது. இனியும் மாமூல் செயற்பாட்டுடன் நிற்கக் கூடாது.

அரசாங்கத்துக்கு எந்த வழியால் நெருக்குதல் கொடுத்து, காரியத்தைக் கைகூட வைக்கலாம் என்பதற்கான புதிய உத்திகளை இனங்கான வேண்டும்; அவற்றைக் கையாள வேண்டும்.

## திறப்பு விழா

ஊர்காவற்றுறை உதவி அ. அ. பிரிவு செஞ்சிலுவைச் சங்க அலுவலகத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதியில் இடம்பெறும். (த)

## பண்ணைப் பாலம் புனரமைப்பு

பண்ணை மரப் பாலத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டு மரக்குற்றிகள் மட்டும் போடப்பட்டிருந்த இப்பாலம், தற்போது மேலும் அதிக மரக்குற்றிகளால் அகலப்படுத்தப்பட்டு வருகிறது. [த-125]

## தூய ஒளி வெற்றிக் கிண்ணம்

குருநகர், ஜூன் 24

'தூயஒளி' சுற்றுக்கிண்ணத்துக்கான 7பேர் கொண்ட உதைப்பந்தாட்டப் போட்டியில் பாஷையூர் சென்:அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சுற்றுக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

1986 ஆம் ஆண்டு மண்டைதீவில் வைத்து 'தூய ஒளி' படகில் சென்ற குருநகர் மீனவர்கள் 31 பேர்களதும் ஞாபகார்த்தமாக வருடாவருடம் நடைபெற்று வரும் மேற்படி போட்டி இம்முறை ஐந்தாவதுஆண்டாக நடைபெற்றது. (இ - 51)

## பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், ஜூன் 24

பாலம் பொதுப்பணி மன்றத்தின் நோயாளர் துயர் துடைப்புப் பணியின் பயிற்சிப் பாசறை கடந்த வெள்ளிக்கிழமை அருட்திரு சிங்கராயர் அடிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பயிற்சிப் பாசறையில் வைத்தியம், உளவியல், தத்துவம், பொதுப்பணி ஆகிய தலைப்புகளில் விரிவுகள் நடைபெறுகின்றன. (இ-த)

# ப. நோ. கூ. ச. ஊழியருக்கு கஷ்ட நிவாரணப்படி இல்லை

## திறைசேரி நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

1990 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கான கஷ்ட நிவாரணப்படி ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. திறைசேரி நிதி ஒதுக்கீடு கிடைக்காததே இதற்குக் காரணம்.

இது குறித்து கூட்டுறவு ஆணையாளர் யாழ். உதவி கூட்டுறவு ஆணையாளரிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய பேச்சு வார்த்தைகளிலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - யாழ். கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்களுக்கான கஷ்ட நிவாரணப்படியில் முதல் மூன்று மாதங்களுக்கான கொடுப்பனவுக்கான பணம் யாழ். அலுவலகத்துக்கு கிடைத்துள்ளது. (இ-3)

## கசிப்பு விற்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்டு வந்த பெண்மணி ஒருவர் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டார்.

கடந்த வாரம் கோண்டாவில் வடக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது. (த-15)

## உள்ளூராட்சி ஊழியருக்கு இன்னும் நிவாரணம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 24

வன்செயல்களால் இறந்தவர்கள் அல்லது கடும் பாதிப்புற்றவர்களுக்கான நிவாரணம் உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

பல்வேறு அரச திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இந்த நிவாரணம் மிகவும் குறுகிய காலத்தில் கிடைத்துள்ள போதிலும் உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்கே இந்த நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை.

இந்த நிவாரணத்தை எந்த நிதியிலிருந்து யார் வழங்குவது என்ற இழுபறி நிலையும் அதற்கு விண்ணப்பிக்கும் முறையிள்ள தெளிவற்ற தன்மையுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (த-126)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர் உ. அ. அ. பிரிவிலுள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

## கிராஞ்சி ஆலய திருப்பணிகள்

பூநகரி, ஜூன் 24

எங்கள் கிராமத்தில் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும் பொருட்டு முக்கிய வாத்தக நிலையங்கள் இல்லை. உதாரணமாக ஒரு சாப்பாட்டுக் கடைதானும் இல்லை. ஆனால் ஆன்மீகத் தேவையை நிறைவேற்ற ஆலயம் உண்டு. அந்த ஆலயத்தின் திருப்பணி வேலைகளை செய்து முடிப்பதற்கு கிராமத்தவர்கள் எல்லோரும் ஆதரவும், ஒத்துழைப்பும் தர வேண்டும்.

இவ்வாறு பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராஞ்சியில் அமைந்திருக்கும் ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைப் பொதுக்கூட்டத்தில் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

பரிபாலனசபைத் தலைவர் திரு. ஆ. க. சுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை என்பனவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. (அ)

## ராஜினாமா

பஞ்சாப் ஆளுநர் ஜெனரல் மல்ஹோத்திரா தமது பதவியிலிருந்துவிலகிக் கொண்டார். எனினும் மாற்று ஏற்பாடு செய்யும் வரை பதவியில் தொடருமாறு அவர் கேட்கப்பட்டிருக்கிறார்.

## நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

அத்தியாவசிய மருந்து வகைகள் இல்லாததால் நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள் ஏமாற்றமடைகின்றனர்.

மருந்து வகைகள் பலவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மருந்து வகைகளுடன் பண்டேஜ் துணிக்கும் அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-111)

## தற்கொலைப் படையினர் பாவித்தது நீல்நிற லொறி?

கொழும்பு, ஜூன் 24

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தற்கொலைப் படையினர் உபயோகித்ததாகக் கூறப்படும் வாகனம் நீல நிற இஸுஸு லொறி என்றுகண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று கருதப்படும் நபரின் பாதமும் கண்டுபிடிக்கப்பட்டதாக அச் செய்திகள் மேலும் கூறின. (இ-எ)

## தொழில் திணைக்கள வேலைகளில் தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்டத்தில் தொழிற் சட்டங்கள் அமுல் குறித்து மேற்பார்வை வேலைகளை தொழில் திணைக்களம் நிறுத்தியுள்ளது.

தொழில் சட்டங்கள், சம்பள வழங்கல் போன்றவை ஒழுங்கான முறையில் அமுலாக்கப்படுகின்றனவா என்பதை தொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்பார்வை செய்து வந்தனர்.

மேற்பார்வை செய்வதற்கு செல்வதற்கான கொடுப்பனவுகள் வழங்க முடியாது என்று தலைமைப்பீடம் அறிவித்துள்ளதையடுத்தே இந்த வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் சேமலாபநிதி திட்டத்துக்கு புதியவர்களை சேர்க்கும் வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. (இ-3)

## கிளிநொச்சிப் பகுதிக்கு 1,050 மெ. தொன் உரம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

லங்கா ஸ்ரீ கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட 1,050 மெற்றிக் தொன் உர வகைகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உரவகைகள் பருத்தித்துறை, நெல்லியடி, கரவெட்டி ஆகிய இடங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன என்று இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் மாவட்ட சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன் தெரிவித்தார். (ஒ-100)

## மட்டு. பல்கலைக்கழகத்தில் முல்லை. மாணவருக்கு அனுமதி

முல்லைத்தீவு, ஜூன் 24

கடந்த ஆண்டு முல்லைத் தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 18 கலைப்பிரிவு மாணவர்களுக்கு மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் இம்மாணவர்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத இந்தச் சூழ்நிலையில் எவ்வாறு மட்டக்களப்புக்குச் சென்று கல்வி பயில்வது என்று ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பான தமது ஆட்சேபனையை முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாகச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர். [த-126)

## பரியோவான் நிர்வாகத் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

பரியோவான் முதலுதவிப் படையின் (கிராமிய யாழ். மாவட்டம்) பரியோவான் நிர்வாகத் தினம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். [த]

## முக்கிய பிரச்சினைகளில் சர்வசன வாக்கெடுப்பு

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, ஜூன் 24

முக்கிய பிரச்சினைகளில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் யோசனை தம்மிடம் இருப்பதாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

இன்று முதலமைச்சராக பதவி ஏற்கவிருக்கும் செல்வி ஜெயலலிதா அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு விடும் தவறுகளை தட்டிக் கேட்க சட்டசபையில் 50 பேர் எதிர்க்கட்சி வரிசையில் இருக்க வேண்டியதில்லை. ஒருவர் இருந்தால் மட்டுமே போதும். புதிய சட்டசபையில் எட்டுப் பேர் எதிர்க்கட்சி வரிசையில் கட்சிக்கு ஒருவர் என்ற விதம் இருக்கப் போகிறார்கள்.

அரசின் தவறுகளை மக்களும் தட்டிக் கேட்கலாம். பத்திரிகைகளும் அந்தப் பணியைச் செய்யலாம்.

அடங்கிக் கிடக்கும் அபலைகளாக பெண்கள் வாழக் கூடாது. உரிமைக்காகப் போராடும் புதுமைப் பெண்களாகவும் அவர்கள் வாழ வேண்டும். அந்த வகையில் நானும் ஒரு புதுமைப் பெண் தான்.

இப்படி செல்விஜெயலலிதா சொன்னார். (இ-எ)

## முதற்கூட்டம்

புதுடில்லி, ஜூன் 24

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திய அமைச்சரவையின் முதற் கூட்டம் சனியன்று நடைபெற்றது.

தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சியை ரத்துச் செய்வது என்று அமைச்சரவை முடிவெடுத்தது.

கூட்ட ஆரம்பத்தில் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அமைச்சர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். (உ-எ)

## கல்யாண்சிங் இன்று பதவி ஏற்பு

புதுடில்லி, ஜூன் 24

திரு. கல்யாண்சிங் உத்தரப் பிரதேச மாநில பாரதீய ஜனதா முதலமைச்சராக இன்று திங்கட்கிழமை பதவியேற்கவிருக்கிறார்.

பாரதீய ஜனதா சட்டசபைக் குழுவின் தலைவராக திரு. கல்யாண்சிங் தெரிவு செய்யப்பட்டார். [இ-எ]

## உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

நல்லூர் உதவி அ. அ. பிரிவிலுள்ள காச நோயாளர்களுக்கும், புற்றுநோயாளர்களுக்குமான பெப்ரவரி மார்ச் மாதங்களுக்குரிய பணக் கொடுப்பனவுகளை இதுவரை பெறாதவர்கள் இன்று திங்கட்கிழமை காலை நல்லூர் உதவி அரச அதிபர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## குழந்தைகள் ஊசி மருந்து; பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். போதனா வைத்திய சாலையில் குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு ஊசி மருந்து வகைகள் இல்லாததால் குழந்தைகள் நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

குழந்தைகளுக்கு 3-ஆம், 5-ஆம், 7-ஆம், 18-ஆம் மாதங்களிலும் 5 வயதிலும் பாவிக்க வேண்டிய ஊசி மருந்து வகைகளுக்கே யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்பே இந்த மருந்து வகைகள் முடிவடைந்துவிட்டன என்றும் குழந்தைகளுக்கு ஊசி மருந்து கொடுக்க வரும் பெற்றோர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்து வகைகள் கடந்த ஏப்ரல் மாதமே கடைசியாக இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் 'வழமையை விட குறைவாகவே அப்போது இந்த மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் நாடுகளுடனான உறவை மேலும் மேம்படுத்துவோம்!

## நரசிம்மராவ் முதலாவது உரை



புதுடில்லி, ஜூன் 24

அயல் நாடுகளுடன் நண்பர்களாக இருக்கவே நாம் விரும்புகிறோம்.

அவற்றுடனான உறவுகளை மேலும் சீர்செய்து நாம் வாழும் பிரதேசத்தை சமாதானம் நிலவும் மதிப்புக்குரிய ஒன்றாக மாற்றுவதற்கு எனது அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்; அதற்கான ஒத்துழைப்பை தங்கு தடையின்றி நல்கும்.

இந்தியாவின் புதிய பிரதம மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவ், நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் ஆற்றிய முதலாவது உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக அரங்கில் இந்தியாவின் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்பும் தாக்கமும் இருக்கக் கூடிய விதத்தில் வெளிநாட்டு உறவுகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சரியான அணுகு முறைகளைக் கடைப்பிடித்து இந்தியாவின் அரசியல் தகராறுகள் தீர்த்து வைக்கப்படும்.—

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.—

சமனற்றநிதிநிலைமையைப் போக்க சர்வதேச நாணய சபையுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படும்.—

வெளிநாட்டு முதலீட்டுக்கு உள்ள தடைகள் முற்றாக அகற்றப்படும். — என்றும் புதிய பிரதம மந்திரி சொன்னார்.

அவர் தமது உரையின் பெரும் பகுதியில் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவது குறித்தும், பஞ்சாப், அசாம், காஷ்மீர் வன்செயல்களைத் தணிப்பது குறித்தும், நாட்டின் கட்டுக்கோப்புக் குலையாமல் பாதுகாப்பது குறித்துமே பிரஸ்தாபித்தார். [அ]

## சீ - பிளேன் நோட்டம்

குருநகர், ஜூன் 24

யாழ். நகரப் பகுதி மேலாக நேற்றுக் காலை சீ - பிளேன் ஒன்று பறந்து சென்றது. (இ-51)

## பல்கலைக்கழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் ஒன்று இன்றுகாலை 9 மணிக்கு நடைபெறவிருப்பதாகத் தெரிவிககப்படுகிறது. (உ)

## கட்டாக்காலி நாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலையை யாழ். மாநகரசபை மீண்டும் தீவிரப் படுத்தி உள்ளது. (இ-15)

## புலத்த பாதுகாப்புடன் பதவியேற்கும் நிகழ்ச்சி

சென்னை, ஜூன் 24

தமிழக முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா இன்று பதவியேற்கும் ராஜாஜி மண்டபம் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று நண்பகல் நடைபெறும் பதவியேற்கும் வைபவத்துக்கு விசேட அழைப்பு அனுப்பப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் மத்திய அமைச்சர்களான வாழைப்பாடி ராமமூர்த்தி, மோகன் குமாரமங்கலம், ஆகியோரும் கலந்து கொள்வர். (உ-3)

## போரூட் நிவாரணம் இவ்வாரம் விநியோகம்

அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் இருந்து போரூட் அமைப்பு எடுத்து வந்துள்ள உணவுப்பொருள்கள் இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்படவிருக்கின்றன.

பிரஸ்தாப தொண்டர் நிறுவனம் 16 மெற்றிக் தொன் அரிசியையும், 16 மெற்றிக் தொன் மாவையும், எட்டு மெற்றிக் தொன் சீனியையும், எட்டு மெற்றிக் தொன் பருப்பையும் லொறிகள் மூலம் இம்மாத ஆரம்பத்தில் எடுத்து வந்திருந்தது.

இந்தப் பொருள்களை இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இவ்வாரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-3)

## தொண்டர் நிறுவனங்களின் நிவாரணப் பணி பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் நிறுவனங்களின் நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் அநுராதபுரத்தில் தேங்கிக்கிடப்பதாலேயே நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரஸ்தாப நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தொண்டர் நிறுவனங்களின் கொழும்புத் தலைமையங்களில் இருந்து தொண்டர் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட பொருள்களை கொண்டு வந்த லொறிகள் வடக்கே வரமுடியாது அநுராதபுரத்தில் தரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மடு அகதிமுகாமுக்கும் உணவுப்பொருள்களைக் கொண்டுசெல்ல முடியாத நிலை எற்பட்டுள்ளதாம். (அ-3)

## ராஜீவ் கொலை விசாரணை:
# தகவல் தரக் கோருகிறது வர்மா ஆணைக்குழு!

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தமக்குத் தெரிந்த தகவல்களை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கும்படி பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களை நீதியரசர் வர்மா ஆணைக்குழு கோரியுள்ளது.

ராஜீவ் காந்திக்கு பாதுகாப்பு வழங்குவதில் பாதுகாப்புப் படையினர் தவறிழைத்து விட்டார்களா?—

ராஜீவ் காந்தியை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழக்காமல் காப்பாற்றியிருக்க முடியுமா? — ஆகிய அம்சங்கள் குறித்தும் நீதியரசர் வர்மா ஆணைக்குழு விசாரிக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## ஹெலியின் சிதைவுகள் பார்வைக்கு

வவுனியாவில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிக்கொப்டரின் சிதைவுகள் இன்று 24 ஆம் திகதி சாவகச்சேரியிலும் கைதடியிலும்—

நாளை 25 ஆம் திகதி கொடிகாமத்திலும், பளையிலும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அதே சமயம் ஹெலியின் சிதைவுகள் நேற்று வடமராட்சி கிழக்கு மருதங்கேணிச் சந்தியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கானோர் இவற்றைப் பார்வையிட்டனர்.

## சூட்டுக்குப் பலி

எங்கிருந்தோ வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

ஆழியவளை - கொடுக்கிளாய்கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

சுண்டிக்குளம் பூனைத்தொடுவாயைச் சேர்ந்த கந்தசாமி இரர்ஜன் (வயது 30) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

சூட்டுச் சம்பவம் இடம் பெற்றநேரத்தில் கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்துச் சேவை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

### மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மினிபஸ்ஸில் இருந்து விழுந்து ஆபத்தான நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வரத்தினம் சிவகுமார் (வயது 18) நேற்றுக் காலை மரணமானார்.

## வயோதிபர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட நிலையில் அழுகிக் கிடந்த சடலத்தை அவர்கள் மீட்டு எடுத்தனர்.

சரவணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா விசாலாட்சி (வயது 60) என்ற வயோதிபப் பெண்ணின் சடலம் அது என்று அடையாளம்காணப்பட்டது. சடலம் பின்னர் இப்பகுதி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (அ-12)

## யாழ். உ. அ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகள், வர்த்தக நிலையங்கள், பொதுக் கட்டடங்கள், வணக்க ஸ்தலங்கள், அரச கட்டடங்கள், பாடசாலைகள் என்பனவற்றுக்கு ஏற்பட்ட சேத விவரங்களே சேகரிக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப புள்ளி விவரங்களின்படி, 969 வீடுகள் முழுமையாகவும், 3060 வீடுகள் ஒரு பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 785 வர்த்தக நிலையங்களும் சேதமுற்றன. அவற்றில் 156 முற்றாக நாசமாகின. 629 வர்த்தக நிலையங்கள் பகுதியாகச் சேதமடைந்தன, [அ-3]

## சமாதானப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வுரிமை, தொழில் வாய்ப்பு போன்றவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. அதிகாரப்பரவலாக்கல் குறித்தே இனிமேல் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

அதற்கான தீர்வை காணும் பொருட்டு கலந்தாலோசனை, விட்டுக் கொடுத்தல் கருத்தொருமித்தல் என்ற அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசு என்றும் தயாராகவே உள்ளது.

ஆனால் அச்சுறுத்தல் மூலமோ பயங்கரவாதம் மூலமோ அரசை அடிபணிய வைக்க முடியாது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட தீர்வு காணமுடியாத நிலையில் தமிழ்க் குழுக்களும் முஸ்லிம் அமைப்புகளும் உள்ளன.

எது எப்படியாயினும், நமது பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாட்டு ஆலோசனையோ, வெளிநாட்டுத் துருப்புகளோ எமக்குத் தேவையில்லை—என்று திரு. பிரேமதாஸா சொன்னார். (அ-எ-3)


# ஆண்டு - 5
## புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை

பரீட்சை 26 - 06 - 1991 [புதன்]

| பரீட்சை | கருத்தரங்கு |
|---|---|
| 1-00 — தமிழ் | 4-00 — தமிழ் |
| 2-15 — கணிதம் | 5-00 — கணிதம் |

## O/L Dec. 91 பரீட்சை 26-06-1991

| முற்பகல் பரீட்சை | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|
| 7-00 — வர்த்தகம் - I | 1-45 — தமிழ் |
| 8-00 — கணிதம் - I | 2-30 — சமூகக்கல்வி |
| 9-00 — விஞ்ஞானம் - I | 3-15 — கணிதம் |
| 10-00 — தமிழ் - I | 4-00 — விஞ்ஞானம் |
| 11-00 — சமூகக்கல்வி - I | 4-45 — வர்த்தகம் |
| 12-00 — ஆங்கிலம் - I | 5-30 — ஆங்கிலம் |

★ ஆசனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து, சுட்டெண்களைப் பெற்றுக் கொள்ளலாம்:

மேலதிக விவரங்களுக்கு:

பரீட்சைப் பகுதி

**BOND** கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4169)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வேலணையூர்

அமரர் குழந்தைவேலு செல்வநாயகம்

தோற்றம்: 12 - 10 - 193 3 மறைவு: 26 - 05 - 1991

எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் 24 - 6 - 91 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும், வீட்டு கிருத்தியம் 25 - 6 - 91 செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டிலும் நடைபெறும்.

இவ் இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர், மைத்துனர்

'பொன்வாசா'
11/5 கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (17117)

## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியம் வாசுதேவன்

சிவசுப்பிரமணியம் வாசுதேவன் காலமானார். அன்னார் கொட்டடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மதிவதனி தம்பதிகளின் அருமை மகனும், குமரேந்திரன் [ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, நீர்கொழும்பு] அவர்களின் தம்பியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 71/5, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று 24-6-1991 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சிவசுப்பிரமணியம்,
[தகப்பன்.]

71/5, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (17319)

### திரு. சின்னத்தம்பி குலசிங்கம் M.B.E

(Retired Civil Servant of The Attorney General Dept., Member Of The Public Service Commission of Malaysia)

திரு. சின்னத்தம்பி குலசிங்கம் M. B. E (பழைய மாணவர் யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் கடந்த 3-6-91 இல் 25, Jalan Gasing, Petaling Jaya, Malaysia வில் தனது 90 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் தொண்டைமானாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி அன்னமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற திருமதி பரிமளம் அவர்களின் அன்புக் கணவரும், லீலாபதி, இரத்தினாபதி (மலேசியா), தசரதர் (U.K), குணபதி (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (மலேயன் பென்சனியர்), காலஞ்சென்ற சொர்ணம்மா, துரைசாமி (பென்சனியர், மலேசியா), பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜசிங்கம் (முன்னாள் பொலீஸ் திணைக்களம்), காலஞ்சென்ற திருமதி புனிதமலர், உமாதேவி (B. Sc, மலேசியா), துரைசிங்கம் (பொறியியலாளர், U.S.A), கப்டன் நிக்கலஸ் (British Army, U. K), ஜெயந்தி (மலேசியா), டொமினிக் (பொறியியல் கல்லூரி மாணவன், U. K), ஜெயசிங்கம் (மலேசியா) ஆகியோரின் அன்புப் பேரனும், நிர்மலநாதன் (மேகன்), நவினி, குலநாதன் (ராஜீவன்), கேதாரிணி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மலேசியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. இராஜசிங்கம்
(பேரன்)

நடுத்தெரு,
தொண்டைமானாறு, (17322)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org